www.agaram.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 06 | විෂයය / பாடம் / Subject | தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | පැය / மணித்தியாலம் / Hours | 2 |
|---|---|---|---|---|---|---|---|

## பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. "ஏழை மக்கள் அனைவரும் வியப்பு அடைந்தனர்"எனும் தொடரில் வரும் **வியப்பு** என்பதன் ஒத்தகருத்துச்சொல்
1.பெருமிதம் 2. அகங்காரம் 3. கோபம் 4. ஆச்சரியம்

02. "அடுத்தமாதம் பாடசாலையில் தேர்வு நடைபெறவுள்ளது"எனும் தொடரில் வரும் **தேர்வு** என்பதன் ஒத்தகருத்துச்சொல்
1.போட்டி 2. விளையாட்டு 3. பரீட்சை 4. கூட்டம்

03. "மிகுந்த ஆசை எம்மை அழித்துவிடும்"எனும் தொடரில் வரும் **ஆசை** என்பதன் எதிர்க்கருத்துச்சொல்
1. விருப்பம் 2. நிராசை 3. ஆர்வம் 4. பேராசை

04. "இயற்கை உணவுகளே உடலுக்கு ஆரோக்கியமானவை"எனும் தொடரில் வரும் **இயற்கை** என்பதன் எதிர்க்கருத்துச்சொல்
1. சேர்க்கை 2. செயற்கை 3. ஆரோக்கியம் 4. புதுமை

05. உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
1. 12 2. 30 3. 216 4. 247

06. உயிர்மெய்க்குறில் எழுத்துக்களில் ஒன்று
1.கு 2. சீ 3. கா 4. பே

07. கிரந்த எழுத்துக்களை உள்ளடக்கிய தொகுதி
1.அ, ஆ, இ 2. ஷ, ஸ்ரீ, ஹ 3. க், த், ங் 4. கு, பி, பெ

08. வாக்கியத்தில் உணர்ச்சியை வெளிப்படுத்தும் போது இடப்படும் குறியீடு
1 .அடைப்புக்குறி 2. வினாக்குறி 3. வியப்புக்குறி 4. காற்புள்ளி

09. அந்தம், ஈறு, முடிவு என்னும் பல சொல் குறிக்கும் ஒரு பொருள்
1. ஆதி 2. நடு 3. தொடக்கம் 4. கடை

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!


agaram.lk

10. கொப்பு, மூங்கில், சுற்றம் என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
    1. கிளை    2. கூட்டம்    3. வகுப்பு    4. பிரிவு

11. "மகாகவிபாரதியார் இனிய பாடல்களைச் சுவைத்து எழுதினார்" என்பதிலுள்ள பயனிலை அடைமொழி
    1. இனிய    2. எழுதினார்    3. சுவைத்து    4. மகாகவி

12. கடவுள் இல்லையென வாதிடுபவன்
    1. ஆத்திகன்    2. புலவன்    3. ஆன்மீகவாதி    4. நாத்திகன்

13. உயர்திணைபலர்பால் பன்மை படர்க்கையைக் குறிக்கும் சொல்
    1.மாணவன்    2. மக்கள்    3. மகன்    4. மாணவி

14. இருபத்தைந்தாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா
    1.பொன்விழா    2. அமுதவிழா    3. வைரவிழா    4. வெள்ளிவிழா

15. "எலியும் சேவலும்" என்ற பாடத்தின் பாடலாசிரியர்
    1 .நவாலியூர் சோமசுந்தரப்புலவர்    2. பேராசிரியர் சோதி
    3. கோகிலா மகேந்திரன்    4. அழ. வள்ளியப்பா

**இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

16. ஆண் குரங்கைக் கடுவன் என்பது போல, பெண் குரங்கு ............................. எனப்படும்.
    1. மந்தி    2. மறி    3. பிடி    4. வடவை

17. குறவனுக்குக் குறத்தி என்பது போல, பிரானுக்கு................................ எனப்படும்.
    1..பிரானை    2. பிராட்டி    3. பிராணி    4. பிரானிச்சி

18. "கமகம" என்ற சொற்றொடர்................................ எனப்படும்.
    1. இரட்டைக்கிளவி    2. அடுக்குத்தொடர்    3. இணைமொழி    4. உவமைத்தொடர்

19. "Computer"என்ற ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ச்சொல்.......................... ஆகும்.
    1 .கணனி    2. கணினி    3. கனிணி    4. கனணி

20. குமலா நன்றாகப் படிப்பாள்................................ பரீட்சையில் சித்தியடைவாள்.
    1. இருந்தும்    2. ஆனால்    3. எனவே    4. ஏனென்றால்

(20 X 2 = 40 புள்ளிகள்)

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk

Agaram.lk - Keep your dreams alive!

Agaram.lk - Keep your dreams alive!

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும் ஏனைய மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. முதலாம் தவணையில் தமிழ்ப் பாடத்திற்காக உம்மால் மேற்கொள்ளப்பட்ட நாடகக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   (i). ஆசிரியரால் நாடகத்திற்காக வழங்கப்பட்ட தலைப்பு யாது?

   (ii) உமக்கு வழங்கப்பட்ட பாத்திரம் யாது?

   (iii). இப் பாத்திரத்தை நடிப்பதற்காக ஆசிரியரால் உமக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள் இரண்டினை எழுதுக.

   (iv). இந் நாடகத்திற்காக நீர் மேற்கொண்ட முயற்சிகள் இரண்டு எழுதுக.

   (iv). இந் நாடகத்தின் மூலம் பெற்றுக் கொண்ட அனுகூலங்கள் இரண்டு எழுதுக.

   (2+3+3+3+3= 14 புள்ளிகள்)

2. பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

   (i). நான் சென்ற கல்விச் சுற்றுலா

   (ii). நான் விரும்பும் தமிழ்ப் புலவர்

   (iii). .உடைந்த பேனையின் சுயசரிதை

   (iv). சட்டதிட்டங்களை மதித்தலின் அவசியம்

   (16 புள்ளிகள்)

3. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த உமது நண்பனை / நண்பியைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

   (10 புள்ளிகள்)

4. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   (i). ஈ.்.பண்டியின் குணவியல்புகள் இரண்டு எழுதுக.

   (ii). “எலியும் சேவலும்” பாடத்தின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட படிப்பினைகள் இரண்டு எழுதுக.

   (iii) .நாயிடமுள்ள தீய பண்புகள் இரண்டு எழுதுக.

   (iv).மலேரியாக் காய்ச்சலுக்குரிய வேறு பெயர்கள் இரண்டு எழுதுக.

   (v). சரிவிகித உணவு என்றால் என்ன?

   (5 X 2 = 10 புள்ளிகள்)

5. வாக்கியம் அமைக்குக.

(i). அரவம் -

(ii). வேட்கை -

(iii). பிரபஞ்சம் -

(iv). மடல் -

(v). கதிரவன் -

(5 X 2 = 10 புள்ளிகள்)

6. பின்வரும் பழமொழிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்தினைச் சுருக்கமாக எழுதுக.

(i). அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

(ii). உப்பிட்டவரை உள்ளளவும் நினை

(iii). போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

(iv). ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு

(v). நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்

(5 X 2 = 10 புள்ளிகள்)

7. பின்வரும் சொற்களை ஒழுங்கமைத்து கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) .பயனுள்ள / வேலைகளில் / ஈடுபடுவது / சிறந்தது / நேரத்தில் / ஓய்வு

(ii). உண்ணும் / பொருட்கள் / உணவிலுள்ள / நம் / நாம் / சத்துப் / வளர்க்கிறது / உடலை

(iii). வடையை / வேப்பமரக் / வைத்துக்கொண்டு / காக்கா / கிளையில் / வாயில் / உட்கார்ந்தது

(iv). தாய் எலியை / கூப்பிட்டுக்கொண்டு / பயந்து / ஓடுகிறது / சேய்எலி

(v). கொடுமைகளுக்கு / அளவே / செல்வந்தனின் / போயிற்று / இல்லாமல்

(5 X 2 = 10 புள்ளிகள்)

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk